## மதுவரிக் கட்டளைச் சட்டம்

## மதுவரி அறிவித்தல் இல: 02/2018

### மதுவரி அறிவித்தல் இல. 666 இல் குறிப்பிடப்பட்டுள்ள நிபந்தனைகளை திருத்தியமைத்தல்

காலத்திற்குக் காலம் திருத்தியமைக்கப்பட்டவாறு மதுவரிக் கட்டளைச் சட்டத்தின் (52 ஆம் அத்தியாயம்) 25 ஆம் பிரிவின் கீழ் எனக்குரித்தாக்கப்பட்டுள்ள தத்துவங்களின் பிரகாரம், நிதி மற்றும் வெகுசன ஊடக அமைச்சர், மங்கள சமரவீர ஆகிய நான், இவ்வறிவித்தல் மூலம் 1979 ஆம் ஆண்டு திசெம்பர் மாதம் 31 ஆந் திகதிய அதிவிசேட வர்த்தமானி அறிவித்தலில் வெளியிடப்பட்ட மதுவரி இல. 66 இலுள்ள அட்டவணையில்

(1) 5 ஆம் பந்தியில் (v) ஆம் உப பந்தியினை இரத்துச்செய்து அதற்குப் பிரதியீடாக பின்வரும் உப பந்தியினை உட்புகுத்துதல்,

“ (v) 18 வயதிற்கு உட்பட்ட எந்தவொரு நபரும்”

(2) 11 ஆம் பந்தியில் உப பந்தி (இ) இனை நீக்குதல், மற்றும்

(3) 11 ஆம் பந்தியில் உப பந்தி (ஈ) இனை உப பந்தி (இ) என மீள இலக்கமிடல்

மூலம் திருத்தியமைக்கப்படுகிறது என இத்தால் பிரகடனப்படுத்துகிறேன்

மங்கள சமரவீர
நிதி மற்றும் வெகுசன ஊடக அமைச்சர்.

நிதி மற்றும் வெகுசன ஊடக அமைச்சு
கொழும்பு 01,
2018 சனவரி மாதம் 10 ஆந் திகதி